# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● பிப்ரவரி 18, 2024 Weekly E-paper ● February 18, 2024




# நிதி அமைச்சரின் குதர்க்கமும், நெற்றியடி விடையும்!

சுப. வீரபாண்டியன்

**தெற்கில் எழுகிறது உரிமைக் குரல்! ஒன்றியமெலாம் ஒலிக்கட்டும்!!**

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

**‘கொட்டம்’ அடங்கும் ‘கொற்றம்’ உயரும்!**

தலையங்கம்

**இன்று தேர்தல் பத்திரம் ரத்து! நாளை?**

சாரததேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● பிப்ரவரி 18, 2024    Weekly E-paper ● February 18, 2024


# நிதி அமைச்சரின் குதர்க்கமும், நெற்றியடி விடையும்!

சுப. வீரபாண்டியன்

தமிழ்நாட்டு ஆளுநருக்கு அடுத்தபடியாக, ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசும் போதெல்லாம் ஒரு விவாதமும், தேவையற்ற சிக்கல்களும் ஏற்படுகின்றன! இப்போது, ஒரு நாளேட்டுக்கு அவர் கொடுத்திருக்கும் சிறப்பு நேர்காணல், பெரிய வெறுப்பு நேர்காணலாக அமைந்திருக்கிறது!



எந்த ஒரு நியாயமான காரணமும் இல்லாமல், திராவிட மாடல் என்பது பிரிவினைவாதம் என்று குற்றம் சாட்டி இருக்கிறார். எதற்காக? ஒன்றிய அரசுக்கு நாம் வரிப்பணமாக ஒரு ரூபாய் அனுப்பி வைத்தால், அங்கிருந்து வெறும் 26 காசுகள் மட்டுமே திரும்ப வருகின்றன என்ற நடப்பு உண்மையை எடுத்துச் சொன்னதற்காக! ஒன்றிய அரசு மாநிலங்களுக்குக் கொடுக்கும் நிதிப் பகிர்வுத் தொகை ஒருதலைப் பட்சமாக உள்ளது என்ற உண்மை வெகுமக்களுக்குத் தெரிந்து விடக் கூடாது என்று நினைக்கிறார் அவர். ஏன் இந்த ஓர வஞ்சனை என்று கேட்டால், அதற்கு உண்மையான விடையைச் சொல்லாமல், எந்த விளக்கமும் தராமல், இது பிரிவினைவாதம் என்று கூறி வாயடைக்கப் பார்ப்பதுதான் அவருடைய தந்திரமாக இருக்கிறது.



நியாயம் கேட்பதைப் பிரிவினைவாதம் என்று சொல்வது பாசிச முகத்தின் வெளிப்பாடு என்றே கூற வேண்டும். இதே போன்றதொரு கோரிக்கையைக் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது மோடி அவர்கள் கேட்டாரே, முன் வைத்தாரே, அவரும் ஒரு பிரிவினைவாதிதானா? நீங்கள் உடைத்தால் மண் சட்டி, நாங்கள் உடைத்தால் பொன் சட்டியா?

எல்லோர்க்கும் எல்லாம் என்பதுதான் திராவிட மாடலின் நோக்கம் என்று பலமுறை சொல்லி ஆகிவிட்டது. அவர்களின் காதுகளில் அது விழுவதில்லை. அந்தக் கோட்பாடு, அவர்களுக்கு அடிப்படையிலேயே ஏற்புடையதும் இல்லை. அதனால்தான் நம் மாண்புமிகு முதலமைச்சர் மிகச்சரியான - நிர்மலா சீதாராமனுக்கு உரிய நெற்றி அடியாக - ஒரு விடையைச் சொல்லி இருக்கிறார்!

பிறப்பின் அடிப்படையில் வர்ண வேறுபாட்டைக் கற்பிக்கின்ற, ஏற்றத்தாழ்வை எப்போதும் விரும்புகின்ற அவர்களுக்கு நம் திராவிட மாடல் கோட்பாடு பிரிவினை வாதமாகத்தான் தெரியும் என்று முதல்வர் சொல்லியிருக்கிறார்.

கருப்பும் காவியும் எப்போதும் முரண்பட்டுத்தான் இருக்கும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது நம் கொள்கை. பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பது அவர்களின் வாடிக்கை! இந்தப் பிரிவினை காலகாலமாக நமக்குள் இருக்கிறது, என்றென்றும் இருந்தே தீரும்! எனவே அவர்களின் பார்வையில் நாம் பிரிவினைவாதிகளாகத்தான் தோன்றுவோம்! ●

# தெற்கில் எழுகிறது உரிமைக் குரல்! ஒன்றியமெலாம் ஒலிக்கட்டும்!!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கும் இந்தியாவில் மக்களாட்சியின் மாண்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கப் போகும் இரண்டு திட்டங்களை அமல்படுத்தும் முனைப்பில் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. “ஒரே நாடு ஒரே தேர்தல்” மற்றும் “மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மாற்றியமைப்பு” என்ற இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டால் ஒற்றை ஆட்சி முறையை நோக்கி இந்தியா நகர்த்தப்படும். அதற்காகவே பாசிச பா.ஜ.க இந்த திட்டங்களைச் செயல்படுத்தத் துடிக்கிறது. இதற்குத் தக்கதொரு எதிர்வினையாக நாட்டிலேயே முதன்முறையாகத் தமிழ்நாடு சட்டமன்றம் இந்த திட்டங்களை எதிர்த்து முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்த அரசினர் தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றி இருக்கிறது.



பிரதமர் மோடி இரண்டாம் முறையாகப் பிரதமர் பொறுப்பை ஏற்றவுடனேயே “ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டத்தை அமல்படுத்துவது குறித்து ஆலோசிக்க 19.06.2019 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தார். பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அழைப்பு விடுக்கப்பட்ட 41 கட்சிகளில், 19 கட்சிகளின் தலைவர்கள் மட்டுமே பங்கேற்றனர். அக்கூட்டத்தைப் புறக்கணித்த கட்சிகளின் எண்ணிக்கையை வைத்தே இத்திட்டத்திற்கான எதிர்ப்பை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. அப்போதும் தி.மு.க இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தது. ஆயினும் பா.ஜ.க அரசு இத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தது. இதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் 7 பேர் அடங்கிய குழுவை அமைத்தது.

“ஒரே நாடு ஒரே தேர்தல்” என்பது புதிய திட்டமன்று. 1952, 1957, 1962 மற்றும் 1967 பொதுத் தேர்தல்கள் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்கு ஒரே நேரத்தில் தான் நடைபெற்றது. அதன் பின்னர் சில மாநிலங்களில் ஆட்சிக்காலம் முடியும் முன்பே அரசு கலைக்கப் பட்டதால் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலை நடத்த முடியவில்லை. அதேபோல் ஆறாவது, ஏழாவது, ஒன்பதாவது, பதினோறாவது, பன்னிரென்டாவது மற்றும் பதின்மூன்றாவது மக்களவை முன்கூட்டியே கலைக்கப் பட்டதால் தொடர்ந்து ஒரே நேரத்தில் நாடாளு மன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் தேர்தல் நடத்த முடியாமல் போனது. ஒரே நேரத்தில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலை நடத்த வேண்டி இருந்தால் மாநிலங்களில் ஆட்சியை கலைக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு செய்வது ஒரு ஆட்சி என்னென்ன காரணங்களுக்காகக் கலைக்கப்படலாம் என்று எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு விரோதமானதாகும். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950 பிரிவுகள் 83, 85, 172, 174 மற்றும் 356 மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 ஆகியவை திருத்தப்பட வேண்டும். அதற்கான அவசியம் இப்போது எழவில்லை.

அமெரிக்காவில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நவம்பர் மாதம் முதல் செவ்வாய்க் கிழமை அதிபர் மற்றும் துணை அதிபர் தேர்தல் நடைபெறும். அதே ஆண்டில் நவம்பர் மாதம் 2 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதிக்குள்ளான எதாவது ஒரு நாளில் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபைத் தேர்தல் நடைபெறும். பொருளாதாரத்தில் பலம் பெற்ற அமெரிக்காவில் கூட ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த இயலவில்லை என்பதுதான் யதார்த்தம். அப்படி இருக்கையில் தேர்தல் செலவுகளைக் குறைப்பதற்காக இந்த நடவடிக்கை என்று கூறுவது உண்மையல்ல. 610 கட்சிகளின் சார்பில் 10,000 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்ட 2019 நாடாளுமன்ற தேர்தல் செலவு ரூ. 60,000 கோடி. நாடு முழுவதும் சட்டமன்றத் தேர்தலை நடத்த இதைவிடக் கூடுதல் செலவாகிறது. எனவே இரண்டையும் இணைத்து நடத்தினால் செலவைக் குறைக்கலாம் என்பதை ஆராய்ந்தால் அவ்வாறு மிச்சப்படுத்த முடியாது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் நாடெங்கும் உள்ள பத்து லட்சம் வாக்குச் சாவடிகளில் அரசுப் பணியாளர்கள், காவலர்கள், துணை இராணுவப் படையினர், பிற பணியாளர்கள் என ஏறத்தாழ ஒரு கோடி பேரை ஒரே நேரத்தில் தேர்தல் பணியாற்ற வைக்க வேண்டிய சூழலில் செலவு கூடுமே தவிர குறையாது. மொத்தத்தில் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்பது அதிபர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கான முதற்படியாகவே அமையும்.

“மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மாற்றியமைப்பு” என்பது, பெருகி வரும் மக்கள் தொகையை கட்டுப் படுத்துவதில் சிறப்பாகச் செயல்பட்ட தென் மாநிலங்களுக்கு அளிக்கப்படும் தண்டனையாகவே அமையும். குறிப்பாக 1971 காலகட்டத்தில் தமிழ்நாடு மற்றும் பீகார் மக்கள் தொகை ஒரே அளவில் இருந்ததால் ஏறக்குறைய சமபங்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது தமிழ்நாட்டின் மக்கள் தொகையை விட பீகார் மக்கள்தொகை ஒன்றரை மடங்கு அதிகம் என்பதால் கூடுதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு கிடைப்பார்கள். நாடாளு மன்றத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்படும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 84 ஆவது திருத்தத்தின் படி 2026 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட இருக்கும் இத்திட்டம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

மக்களாட்சியைக் காத்திட தெற்கில் இருந்து எழுந்திருக்கும் இந்த உரிமைக் குரல் ஒன்றியம் முழுவதிலும் எதிரொலிக்கட்டும். இந்தியாவின் ஜனநாயக நடைமுறைக்கு எதிராக இது போன்ற திட்டங்களை முன்னெடுக்கும் பாசிச பா.ஜ.க மற்றும் அதன் நிழல் கூட்டாளியான அ.இ.அ.தி.மு.க வை எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்தி மக்களாட்சியின் மாண்பைக் காப்போம்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘கொட்டம்’அடங்கும் ‘கொற்றம்’உயரும்!

தென்கோடியில் அரசுகளுடன் ஒத்துழைக்காமல் ஆளுநர்கள் ஆணவத்தால் ஆடுகிறார்கள். வடகோடியில் விவசாயிகளுடன் பிரச்சனையைப் பேசித் தீர்ப்பதை விட்டுவிட்டு அவர்கள் மீது அடக்குமுறைத் தாண்டவம் ஆடுகிறது ஒன்றிய அரசு.

விளைபொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயித்துச் சட்டமாக்கவும், எம். எஸ்.சாமிநாதன் ஆணையக்குழு பரிந்துரைகள் உள்ளிட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஒன்றிய அரசு ஏற்க மறுத்ததால் டில்லியை நோக்கி அறவழியில் போராட பஞ்சாப், அரியானா, உத்தரப் பிரதேச விவசாயிகள் டிராக்டர்களில் ஊர்வலமாகப் போய்க்கொண்டு இருக்கிறார்கள்.

போராட்டம் என்பது மக்களின் உரிமை. விவசாயிகள் போராட இன்னமும் டில்லி சென்றடையவில்லை. போராட்டத்தைத் தொடங்கவும் இல்லை.

ஆனால் ஏதோ அன்னிய நாட்டுப் படைகளைத் தடுப்பது போல விவசாயிகள் வரும் வழிகளில் முள்வேலிகள், பெரிய பெரிய காங்கிரிட் தடுப்புகள், குத்திக் கிழிக்கும் ஆணிகள் போன்றவைகளைப் போட்டிருப்பதைப் பார்த்தால், இது ஓர் ‘அரசு’ செய்யும் வேலையாகத் தெரியவில்லை. விவசாயிகளைத் தம்குடிமக்களாகப் பார்க்காமல் ஏதோ எதிரிகளைப் போல ஒன்றிய அரசு பார்ப்பதாகத் தோன்றுகிறது.

தடுப்புகளைத் தகர்த்துத் தாண்டி உரிமைகளைக் கேட்டுச்செல்லும் விவசாயிகள் மீது தண்ணீர் பீச்சி அடித்தும், கண்ணீர் புகைக் குண்டுகளையும், ரப்பர் குண்டுகளையும் வீசித் தாக்குகிறார்கள் காவலர்கள். நூற்றுக் காணக்கானோர் காயம் பட்டிருப்பதாகத் தொலைக் காட்சியில் செய்தி வருகிறது.இதில் கொடுமை என்னவென்றால், விமான வழித்தாக்குதல் போல ‘ட்ரோன்’ களை வானத்தில் ஏவி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசுகிறார்கள்.

மணிப்பூர் எரிந்துகொண்டு இருந்தபோது பிரதமர் மோடி வெளிநாடு சுற்றுப் பயணம் சென்றதைப் போல, இப்போதும் இங்கே விவசாயிகள் போராட்டம், தாக்கப் படுகிறார்கள். பிரதமர் போய்விட்டார் அமிரகத்திற்கு.

உற்பத்தி செய்து உணவைத் தட்டில் வைத்துக் கொடுக்கும் விவசாயிகளைத் தடுக்க வழியில் முள்வேலி, ஆணிகளின் படுக்கைகளை வைத்து வேடிக்கை பார்ப்பது எந்தவிதத்தில் நியாயமாகும்?

ஆணவம், எதேச்சதிகாரம், சர்வாதிகாரம் வென்றதாக வரலாறு இல்லை.

“அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாகும்” என்கிறார் எங்கள் புலவர் இளங்கோ அடிகளார்.

சில மாதங்களில் வரவிருக்கும் பொதுத்தேர்தலில் அரசியல் பிழைத்த பா.ஜ.கவுக்கு அறத்தின் கூற்றம் என்ன என்பதை மக்கள் சொல்வார்கள்.

பா.ஜ.கவின் ‘கொட்டம்’அடங்கும், இந்தியா கூட்டணியின் ‘கொற்றம் ‘உயரும்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# கிழக்கு மண்டல அமைப்புக் கூட்டம்




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கிழக்கு மண்டல அமைப்புக் கூட்டம் 10-02-2024 அன்று திருச்சியில் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. அமைப்புச் செயலாளர் புலேந்திரன் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மணிவண்ணன் வரவேற்புரையாற்றினார். திருச்சி மாவட்டத் தலைவர் மதியழகன், தஞ்சை மாவட்டச் செயலாளர் பேராசிரியர் சாமி, திருச்சி மாவட்டத் துணைத் தலைவர் மகேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கயலையாவுக்கு நினைவேந்தல்





திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அவைத் தலைவரும், திமுக இலக்கிய அணியின் துணைத் தலைவருமான கயல் தினகரன் அவர்கள் 15-02-2024 ஆம் நாள் முதுமையின் காரணமாகக் காலமானார்

சென்னை, திராவிட இயக்கத் தமிழர் பேரவை அலுவலகத்தில் 17-02-2024 அன்று காலை 10:30 மணி அளவில் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கயல் தினகரன் அவர்களின் படத்தை அவரது தம்பிமகள் கயல் திறந்து வைத்தார்.

பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், வசந்தா அம்மையார், பொருளாளர் எழில். இளங்கோவன், துணை அவைத்தலைவர் பொள்ளாச்சி மா. உமாபதி, துணைப் பொதுச்செயலாளர்கள் உமா, செல்வின் சௌந்தர்ராசன், திராவிட நட்புக் கழகத் தலைவர் சிங்கராயர், கருஞ்சட்டை பதிப்பக இயக்குனர் பெல்.ராசன், திராவிடத் தமிழர் அறக்கட்டளை இயக்குனர் லாரன்ஸ், இரா. விஜயலட்சுமி, தலைமை நிலையச் செயலாளர் எட்வின், முத்தையா குமரன், திராவிட மணி, முத்துக்குமார், அம்பத்தூர் மோகன்ராம், மேலாளர் மனோகரன், அசோக் குமார், லோகபாலன், மதிவாணன், உள்ளிட்ட பேரவைத் தோழர்களும், கயல் தினகரன் அவர்களின் மகன்கள் தமிழ்ச்செல்வன், செழியன், மருமகள்கள், மாலா, தனம், தம்பி கோவிந்தராசன், உள்ளிட்ட உறவினர்களும் நிகழ்ச்சியில் நினைவேந்தல்கலைப் பகிர்ந்து கொண்டார்கள். நிறைவாக, பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், கயல் தினகரன் அவர்கள் குறித்த நினைவேந்தலை நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்.

**- பொள்ளாச்சி மா. உமாபதி**

# இன்று தேர்தல் பத்திரம் ரத்து! நாளை ?

**சாரதாதேவி**

2018 இல் ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த தேர்தல் பத்திரத் திட்டம், பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை அரசியலமைப்பு உறுப்பு 19 (a) இன் கீழ் செல்லாது என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு இன்று பரபரப்புத் தீர்ப்பு அளித்துள்ளது. கட்சிகள் தேர்தல் நிதி பெறுவதில் கருப்புப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி என 2017இல் அன்றைய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியால் கொண்டு வரப்பட்டத் திட்டம்தான் தேர்தல் பத்திரத் திட்டம்.

ஆளும் ஒன்றிய பா.ஜ.க அரசு இந்தத் தேர்தல் பத்திரங்கள் மூலம் தேர்தல் நிதியாக ரூபாய் 5,272 கோடிகளைப் பெற்றுள்ளதாகத் தகவல் பெறப்பட்டுள்ளது. தேர்தலில் 1விழுக்காட்டுக்குக் குறையாமல் வாக்குகள் பெற்ற எல்லாக் கட்சிகளும் பெறலாம் என அறிவிக்கப் பட்டாலும் மொத்தம் இந்த 6 ஆண்டுகளில் பா.ஜ.க மட்டும் 57 விழுக்காடு பணம் பெற்றுள்ளது. நாட்டில் மற்ற எல்லாக் கட்சிகளும் சேர்ந்து பெற்ற தொகையை விட அதிகமாகப் பெற்றது மட்டுமல்ல. எங்கிருந்து எவ்வளவு பெறப்பட்டது என அறிவிக்க வேண்டாம் என்பதற்காகக் கம்பெனிச் சட்டம், தகவலறியும் உரிமைச் சட்டம், வருமான வரிச் சட்டம் ஆகியவற்றையும் திருத்திக் கொண்டது. அவை அனைத்துமே செல்லாது என உச்ச நீதிமன்றம் இன்று தீர்ப்பு அளித்துள்ளது.

தேர்தல் பத்திரங்கள் மூலம் கட்சிகளுக்குத் தேர்தல் நிதி வழங்கிய நிறுவனங்கள் கைம்மாறாக எதையாவது பெறுவதற்காகவே அவ்வளவு பெரிய நிதியை வழங்கி இருக்கும் என்பதால், அதை மறைப்பது தகவல் அறியும் சட்டத்தின் நோக்கமான பங்கேற்பு சனநாயகத்தையும் வீழ்த்தக் கூடிய செயல் என நீதிபதிகள் தீர்ப்பில் கூறி உள்ளனர். மேலும் கருப்புப் பணத்தை இந்தத் திட்டத்தின் மூலம் எப்படி ஒழிக்கப் போகிறார்கள் என்பதற்கும் ஒன்றிய அரசிடம் இருந்து சரியான பதில் இல்லை என உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதுவரை பணமாக்கப்படாத தேர்தல் பத்திரங்கள் உடனடியாகத் திரும்ப ஒப்படைக்கப் படவேண்டும் என்றும், பாரத ஸ்டேட் வங்கி இனி தேர்தல் பத்திரங்கள் வழங்கக் கூடாது எனவும், அடுத்து எல்லா பணத்தையும் கட்சிகள் நிறுவனங்களுக்குத் திரும்ப ஒப்படைக்க வேண்டி இருக்கும் எனவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மார்ச் 6 இக்குள் எல்லா விவரங்களையும் பாரத ஸ்டேட் வங்கி உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் எனவும், அவை மார்ச் 13 அன்று தேர்தல் ஆணையத்தின் அலுவல் வலைத்தளத்தில் பதிவேற்றப்படும் எனவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை அனைத்துக் கட்சிகளும் வரவேற்றுள்ளன. பா.ஜ.க. கட்சியின் ஒரு வருவாய் ஊற்று அடைபட்டதில் மகிழ்ச்சி. இன்னும் 'பி.எம்.கேர்' நிதி உள்ளிட்ட ஊற்றுகளும் இப்படி ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். வெல்லட்டும் சனநாயகம். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian